# தனியார்சொத்து பற்றிய யூ.என்.பி. தீர்மானம்

## அரசியல் அமைப்புசபையில் தோல்வி

கொழும்பு சனி

தனியார் சொத்துக்களைப் பேணுவதும் பாதுகாப்பதும் புதிய அரசியல் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தின் முக்கிய கோட்பாடுகளில் ஒன்ருய் இருக்க வேண்டும் என்ற கருத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியினர் இன்று அரசியலமைப்புச் சபையில் கொண்டுவந்த திருத்தப் பிரேரணை தோல்வியடைந்தது.

அரசியல் அமைப்பு அலுவல்கள் அமைச்சர் இது குறித்து கருத்து வெளியிடுகையில் கோட்பாடுகள் அரசாங்கத்துக்கு வழிகாட்டுபவையாகவே இருக்கும் என்றும் இதற்கான சட்டங்களை ஆக்குவது பொருத்தமானதென்றும் குறிப்பிட்டார்.

உற்பத்தியைப் பகிர்ந்தளிக்கும் விதத்தில் கூட்டுடமையை வளர்த்து சோஷலிச ஜனநாயகத்தை நிர்மாணிப்பதே அரசின் முக்கிய கொள்கையாகும் என்று அவர் சொன்னுர். அவர் மேலும் பேசுகையில் சிலர் இங்கு முதலாளித்துவ ஜனநாயகத்தை ஏற்படுத்த விரும்புகிருர்கள். ஆனுல் அரசாங்கம் சோஷலிச ஜனநாயகத்தை ஏற்படுத்தவே உறுதிகொண்டிருக்கிறது என்ருர்.

ஐ. தேசியக் கட்சியின் திருத்தத்தை திரு ஜே. ஆர். ஜயவர்த்தன சமர்ப்பித்துப்

(6-ம் கலம் பார்க்க)

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
Nationa Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 93

யாழ்ப்பாணம் வைகாசி 2 ரபீஉல் 20 ஞாயிற்றுக்கிழமை (16-5-71)

# 'பொருளாதார அமைப்பில் அடிப்படை மாற்றம் தேவை'

அனுராதபுரம்

## பயங்கரவாதிகள் முகாமில் ஐந்து கூடாரங்கள்

கோட்டை, சனி

நாட்டின் பல பகுதிகளில் மேலும் பல பயங்கரவாதிகள் சரணடைந்துள்ளனர். நேற்று மேலும் 33 பயங்கரவாதிகள் சரணடைந்துள்ளனர். அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள பயங்கரவாதிகள் முகாம் ஒன்றின் மீது ஆயுதப்படையினர் தாக்குதல் நடத்தினர். இந்த முகாம் இப்பகுதிப் பயங்கரவாதிகள் உள்ள முகாம்களில் முக்கியமான ஒன்றென்றும். இந்த முகாமில் 5 கூடாரங்கள் இருந்ததாகவும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்த முகாமில் பல ஆயுதங்களும் உணவுப் பொருட்களும் இருந்தனவாம்.

அம்பாந்தோட்டப் பகுதியில் கஸாம்பிட்டியா என்ற இடத்திலுள்ள தபால் நிலையம் ஒன்றிற்கு பயங்கரவாதிகள் தீயிட்டுள்ளனர்.

மகரகம பொலிசார் நூற்றுக்கு மேற்பட்ட பயங்கரவாதிகளைக் கைது செய்துள்ளனர். நாட்டின் சகல பகுதிகளிலும் காவல் நடவடிக்கைகள் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன. உறுவொக், பக்கமுன பகுதிகளில் பயங்கரவாதிகள் சிற்சில இடங்களில் நாசவேலையில் ஈடுபட்டதாகச் சொல்லப்படுகிறது. மீதியாக்கொட என்னும் இடத்தில் திருடப்பட்ட துணிகளின் ஒரு பகுதியைப் பொலிசர் மீட்டுள்ளனர். மிதிரிகிரிய பொலிஸ் நிலையம் திறக்கப்படவிருப்பதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கேகாலையில் 14 பேர் சரணடைந்துள்ளனர். சரணடைந்த 33 பேரில் கொல்லாந்தையில் சரணடைந்த 13 பேரும் இரத்தினபுரியில் சரணடைந்த 11 பேரும் அடங்குவர்.

## தேசிய சீரமைப்புக்கு செனட்டர் நடேசன் யோசனை

கொழும்பு, சனி

நாட்டில் பயங்கரவாத இயக்கம்தோன்றியதற்கான அடிப்படைப் பொருளாதாரக் காரணங்களை அறிந்து அவைகளைத் தீர்க்கவேண்டுமென்று செனட்டர் நடேசன் வலியுறுத்தினர்.

செனட்சபை விவாதத்தில் கலந்துகொண்டு இன்று உரை நிகழ்த்திய செனட்டர் நடேசன், பொருளாதாரத் துறையில் பணக்காரர்களும் தியாகங்கள் செய்ய முன்வர வேண்டும் என்ருர்.

பணக்காரர்கள் நாட்டின் நிலைமையை உணர்ந்து தங்கள் உரிமைகள் சிலவற்றையும் சலுகைகளையும் விட்டுக்கொடுக்க முன்வரவேண்டும், இது நாட்டுக்குச் செய்யும் பெரிய சேவையாக இருக்கும். இளைஞர்கள் மத்தியில் விரக்திமனப்பான்மையையும் இல்லாமல் செய்ய வேண்டும். வீணைப் பேசிக்கொண்டிருப்பதால் பயனில்லை என்று அவர் தொடர்ந்து சொன்ஞர்.

பணக்காரர்கள் தியாகங்கள் செய்ய முன்வரும் அதே சமயம் அரசாங்கம் அரிசி மானியம் போன்றவற்றைக் கைவிட முன்வரவேண்டும் அனுவசிய செலவுகளை எடுத்துவிட அரசாங்கம் பயக்கக்கூடாது. சமுதாயத்தில் அடிப்படை மாற்றங்களைச் செய்ய தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

இன்று நாட்டில் இரத்தக்களரி ஏற்பட்டுள்ளது. இதற்கு ஒரு காரணம் எனது தலைமுறையைச் சேர்ந்தவர்களின் போக்குதான் என்பதையறிந்து கவலைப்படுகின்றேன்.

பார்லிமெண்ட் ஜனநாயக முறை மூலம் மக்களின் தேவைகள் அனைத்தையும் இவர்களால் பூர்த்திசெய்ய முடியாமற்போய்விட்டது. எனவே நாட்டு மக்களின் தேவைகளை அறிந்து அவற்றைக் களைய நடவடிக்கை எடுக்கவேண்டும்

நாடு இன்றிருக்கும் நிலைமையில் புதிய அரசியல் திட்டத்தை அள்ளித்தெளித்த அவசரக்கோலத்தில் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படுவது குறித்து வேதனையும் வெட்கமும் அடைகிறேன்.

இப்பொழுது நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது நாட்டின் பிரச்னைகளை சரியான முறையில் இப்பொழுதே தீர்த்தாக வேண்டும். இசனைத் தவறவிட்டால் எதிர்காலத்தில் பெரிய தண்டனைகளை நாம் எதிர்நோக்க நேரிடும்என்று செனட்டர் நடேசன் எச்சரித்தார்.

"பயங்கரவாத இயக்கத்தில்

## தொடர்பில்லாதவர்கள் விடுதலை செய்யப்படுவர்"

கோட்டை, சனி

பொதுச்சொத்துக்களை சேதப்படுத்தியவர்களைக் கொண்டே அவற்றைப் புனரமைப்புச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்று நீதி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. நிசால் ஜெயவிக்கிரமா கூறியிருக்கிருர்

பயங்கரவாத இயக்கத் தொடர்புடையவர்கள் அதிகமானேர் வேலையில்லாதோரே என்று இதுவரை கூறப்பட்டுவந்தது பொய்யாகிவிட்டது என்று கூறிய அவர், பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளவர்களில் அரைப்பங்கினர் வேலை பார்ப்பவர்களே என்று தெரிவித்தார்

பயங்கரவாத இயக்கத்துடன் எதுவித சம்பந்தமும் இல்லாதவர்கள் மாத்திரமே விடுதலைசெய்யப்படுவர் என்றும் ஏனையோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் நகர்ப்புறங்களில் அமைக்கப்படவிருக்கும் புனர்வாழ்வு நிலையங்களில் இவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படுமென்றும் திரு. நிக்கலஸ் ஜெயவிக்கிரமா மேலும் சொன்னுர்

### இன்று

நல்லூர் கந்தசுவாமி கோவில் வைகாசி நிறைவத்தில 2ந் திருவிழாவான இன்று மாலை சுவாமி வீதி வலம் வருதலும், மாலை 4 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததம்பிரான் அவர்களின் கதாப்பிரசங்கமும் நிகழும்.

## வெளிநாட்டு தளங்களுக்கு இடமில்லை

கோட்டை, சனி

வெளிநாட்டுத் தளங்கள் சம்பந்தமான அரசாங்கத்தின் அடிப்படையான கொள்கையில் மாற்றம் எதுவும் இடையாதென்று அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

இலங்கையில் தளம் அமைக்கும் வசதியை வல்லரசு எதுவும் கேட்கவுமில்லை அது பற்றி அரசாங்கம் ஆலோசிக்கவுமில்லையென்று அறிவிக்கப்பட்டது.

## தலைமன்னர் கப்பல்சேவை

கொழும்பு, சனி

தூத்துக்குடி தலைமன்னர் கப்பல்சேவை இம்மாதம் 21-ம்திகதி ஆரம்பமாகும் என்று தெரிகிறது.

தலைமன்னரிலிருந்து 20-ம் திகதியே கப்பல் புறப்படும் என்றும் தூத்துக்குடியிலிருந்து புறப்படும் கப்பல் 21-ம் திகதி இலங்கை வருமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஊரடங்கு நேரம்

இன்று மாலை
7-30
மணி முதல்
நாளை காலை
4-30
மணி வரை

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு




டொலர் அலுமினியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

A 40 வான் C V தொடர் என் நல்ல நிலைமையில் உள்ளது. எந்நேரத்திலும் பார்வையிடலாம். விஜயால் சோப், முகமாலை, எழுதுமட்டுவாள். 3108

### WANTED

Wanted for the Co-operative Hospital Moolai Chulipuram a qualified Laboratory Technologists for Temporary appointment or contract Salary according to qualification and experience Please apply to the President on or before 31-5-71 with full particulars. 3106

### கல்வி

யாழ்ப்பாணக் கல்வி நிலையத்தில் ஜி. சி. ஈ. O. L / A. L் மாலை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. மாலை வகுப்புக்கள் மற்றைய பாடசாலைகள் திறக்கும் வரையும் காலையில் நடைபெறும். பின்னர் மாலையில் நடைபெறும். மாலை வகுப்புக்கள் 16-5-71 காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். யாழ்ப்பாணக் கல்வி நிலையம் 304/3 ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 3105

கோட்டை, சனி

மே மாதம் 16-ம் திகதி, செப்டம்பர் மாதம் 19-ம் திகதி அக்டோபர் 10-ம் திகதி ஆகிய நாட்களிலுள்ள விசேஷ விடுமுறைகள் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் நேற்று அறிவித்தது

### தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு கல்வி ஸ்தாபனத்தைப் பொறுப்பேற்று நடத்துவதற்கு நடுத்தர வயதுடைய யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட ஆண் அல்லது பெண் உடனடியாகத் தேவை. கல்வித் தகைமைகள், வேலை அனுபவம் பற்றிய நற்சான்றிதழ்களுடன் முழு நேரம் அல்லது பகுதி நேர வேலைக்கு எதிர்பார்க்கும் சம்பளம் குறிப்பிட்டு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பரதாரர், 30, காலி வீதி, கொழும்பு 6. 3104

ஸ்தாபனத்திற்கு மனேசர், விற்பனையாளர் தேவை. மனேச்சர் ரூபா 3000 பிணைப்பணம் கட்டக்கூடியவராகவும், விற்பனையாளர் ரூபா 1000/- பிணைப்பணம் கட்டக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். விவசாய இரசாயனப் பொருட்கள் பற்றிய நல்ல தேர்ச்சி இருத்தல் வேண்டும். இரு நற்சாட்சிப்பத்திரங்களுடன் இம்மாதம் 22-ம் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 3103, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 3103

மருதனுமடம் சந்தி-(பெற்றோல் செட் முன்னால்) புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் கணேசபவான் ஓட்டலுக்கு கசியர் - டீமேக்கர் குசினி வேலைக்காரர் பரிமாறுபவர்கள் தேவை. விரும்புவோர் 25-5-71 திகதிக்கு முன் நேரில் சமுகம் தருக. கசியர், பிணைப்பணம் செலுத்தக்கூடியவராக இருக்கல் வேண்டும். 3102

### நெல்லியடியில் மீண்டும் பொலிஸ் நிலையம்

பருத்தித்துறை, சனி

நாட்டின் நெருக்கடி நிலைமை காரணமாகத் தற்காலிகமாக மூடப்பட்டிருந்த நெல்லியடி பொலிஸ் நிலையம் மீண்டும் நேற்று முன் தினம் திறக்கப்பட்டுள்ளது.

## பதவி
### மருத்துவ மாது
### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களின் முடிவு திகதி 31-5-71 ஆகும்.

ஏனைய விபரங்களை யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகரசபை ஆணையாளர்,
மாநகராட்சிமன்றம்,
யாழ்ப்பாணம்,
13-5-71. 8289

### பயிற்சியாளர் கைது

கோட்டை, சனி

ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சிபெறும் 35 பயிற்சியாளர்கள் பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நேற்றும் பாதுகாப்புப்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்

### 4 நாட்களில் இறக்கினர்

மாவிட்டபுரம், சனி

காங்கேசன்துறைமுகத்தில் சிமேந்து 'ஜிப்சம்' கல் இறக்குவதில் சாதனை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சிமேந்து உற்பத்திக்குத் தேவையான 'ஜிப்சம்' என்னும் கல்லை ஏற்றி காங்கேசன்துறை வந்த கப்பலில் இருந்து ஜிப்சத்தை விரைவில் இறக்கி ஒரு சாதனையை ஜெயபாலசிங்கம் கம்பனியார் ஏற்படுத்தியுள்ளார்கள் முன்னர் 9 நாட்களில் இறக்குமதி செய்யப்பட்ட தொகையை இவர்கள் நான்கு நாட்களில் இறக்கியுள்ளனர்.

### பதுக்கல் வெள்ளைப்பூடு

மாவிட்டபுரம், சனி

காங்கேசன்துறைப் பகுதியில் உள்ள கடைகளில் திடீர் பரிசோதனையிட்ட இராணுவத்தினர், பதுக்கி வைத்திருந்த பெருமளவு மண்ணெய்யைக் கைப்பற்றி பொது மக்களுக்கு விநியோகித்தனர்.

இங்குள்ள ஒரு கடையில் வெள்ளைப்பூடும் கைப்பற்றப்பட்டு பாவனையாளருக்கு இராணுவத்தினரால் வழங்கப்பட்டது.


ரீகல் இப்பொழுது நடைபெறுகிறது
தினசரி 10-30, 2-00
ராஜ்கபூர்—ராஜ்ஸ்ரீ — மொகமுட்
AROUND THE WORLD
(ஹிந்தி) டெக்னிக்கலர்
இசை: சங்கர் ஜெய்கிஷன்
கொழும்பில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய படம்

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 பி.ப. 2-00
சிவாஜி கணேசன் கே. ஆர். விஜயா நடித்த
ராமன் எத்தனை ராமனடி

மகத்தான 50-வது தினம்
கடைசிவாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30 பி. ப 2-00
மாஸ்டர் பிரபாகர் பேபி சுமதி - லெட்சுமி நடித்த
வா ராஜா வா

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 பி.ப. 1-30
எம்.ஜி.ஆர்.
சரோஜாதேவி
நம்பியார்—நாகேஷ்
மனோரமா மற்றும் பலர் நடித்த
படகோட்டி
(சரவணா சித்திரம்)
டைரக்ஷன் T. பிரகாஸ்ராவ்

கெப்பிட்டல்
காலை 10, பி.ப 2-00 மணி
கை கொடுத்த தெய்வம்

கிங்ஸ்லி
காலை 10, பி.ப 2-00 மணி
தில்லானா மோகனாம்பாள்

லிடோ
காலை 10, பி.ப 2-00 மணி
வேட்டைக்காரன்

பிளாஸா
காலை 10, பி.ப.2-00 மணி
பாலும் பழமும்

அடுத்த வெளியீடு
மூன்றெழுத்து
(சரவணா சித்திரம்)

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி காலை 10-30, பி. ப 2-30
ஜெமினி - ஜெய்சங்கர் நடித்த
பூவா தலையா

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி
காலை 10-30, பி. ப 1-30
ஜெமினி — சௌகார்ஜானகி நடித்த
இரு கோடுகள்

வெஸ்லி சினிமா
சாவகச்சேரி
தினசரி
காலை 10 30, பி. ப. 2-30
முத்துராமன் — விஜயகுமாரி நடித்த
பொலிஸ்காரன் மகள்

RAJAH - JAFFNA
Daily
10-00a m. 1-30&4-00p.m.
Eli Wallach,
Terrence Hill
in
ACE HIGH
(Color - From Paramount)

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30 a.m
Erig Porter
in
THE LOST CONTINENT
தினசரி பி. ப. 2-00
ஜெய்சங்கர் - விஜயலட்சுமி நடித்த
சபாஷ் தம்பி

கலைவாணி கல்வி நிலையம்
சிங்களம், கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், கலை, ஆங்கிலம், சுருக்கெழுத்து, தட்டெழுத்து. ஜீ. சீ. ஈ. (சாதாரண/ உயர்தர) வகுப்புகள் காலை மாலை நடைபெறுகின்றன. (விடுதி வசதி உண்டு)
கலைவாணி கல்வி நிலயம், கதிரிப்பாய், அச்சுவேலி. 3288


## முக்கிய அறிவித்தல்
### சங்கானைப் பட்டினசபை

கீழ்க்காணும் விபரமடங்கிய காணிகளை சங்கானைப் பட்டினசபைக்கு விளையாட்டு மைதானம் அமைக்கவிலைக்கு விற்க உரித்தாளர்கள் சம்மதித்துள்ளனர். எனவே இது சம்பந்தமாக எதிர்ப்புத் தெரிவிக்க விரும்புவோர் தகுந்த ஆதாரங்களுடன் எழுத்து மூலமாக இரு வாரங்களுக்குள் எனக்கு அறியத்தருமாறு கோரப்படுகிறது.

1. உறுதி இலக்கம் 1097/5-9-1940 உறுதிப்படுத்திய நொத்தாரிசு. திரு. ஏ. கே. நவரத்தினம்,
கொடுத்தவர்: அம்பலவாணர் கதிரவேலுவும் மனைவி தங்கம்மாவும்.
சீதனம்: திரு. வில்வலிங்கம் செல்லையாவுக்கும் மனைவி இராசேஸ்வரிக்கும் - உரிமை கோருபவர்.

காணிவிபரம்:
வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு சங்கானைக் கோவிற்பற்று சங்கானை இறை மாலியவத்தை என்னும் காணி நெல்லும் நிலயும் பரப்பு 18.

எல்லைகள்
கிழக்கு : மாரிமுத்து பெண் வள்ளியம்மைக்குச் சொந்தமான ஆதனம்.
வடக்கு : சின்னப்பொடியன் முத்தாம்பிள்ளைக்கும், சுப்பர் முருகேசுவுக்கும் உரிய ஆதனம்.
மேற்கு : அம்பலவாணர் கதிரவேலுவுக்கும் உரிய ஆதனம்
தெற்கு : ஒழுங்கை:

2. உறுதி இலக்கம்: 2365/27-1-51 உறுதிப்படுத்திய நொத்தாரிசு. திரு. மு. க. சுப்பிரமணியம்.
கொடுத்தவர்: தா. கதிர்காமர் கைம்பெண் ஆச்சிப்பிள்ளையும் பொன்னுத்துரை முத்துவேலுவும் மனைவி சரஸ்வதியும்.
அறுதி: வல்லிபுரம் செல்லத்துரைக்கும் பெண் கனகம்மாவுக்கும் - உரிமைகோருபவர்.

காணிவிபரம்:
வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு சங்கானைக் கோவிற்பற்று சங்கானை இறை தாக்குடையான் வயலும் மாலியவத்தையும் நெற்பரப்பு 16 1/8-ல் மேற்குப்புறமாக நெற்பரப்பு 12.

எல்லைகள்:
கிழக்கு : பொன்னுத்துரை பெண் சரஸ்வதிக்குரிய இதன் மிகுதிக்காணி
வடக்கு : முருகேசு இராமசாமிக்கும் செல்லத்துரை பெண் கனகம்மாவுக்குமுரிய ஆதனம்.
தெற்கு : கணபதிப்பிள்ளை செல்லப்பாவினுசித்தாவருக்குரிய ஆதனம்.
மேற்கு : முருகேசு இராமசாமிக்குரிய ஆதனம்.

குறித்த தவணைக்குள் எதிர்ப்புகள் கிடைக்காவிடில் சட்டப்படி இப் பட்டினசபை குறித்த காணிகளை விலைக்குப் பெறும் என்பதையும் இனி எக்காலமும் உரித்துக் கோர அருகதை அற்ற நிலைமை ஏற்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சி. வைரமுத்து
தலைவர்,
பட்டினசபை, சங்கானை.

பட்டினசபை அலுவலகம்,
சங்கானை. 6-5-1971.
8290

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஐக்கிய அரபுக் குடியரசில்

# பதவி விலகிய யுத்த அமைச்சருக்கு வீட்டுக்காவல்!

## உயர்தலைவர்கள் கைது; புதிய மந்திரிசபை அமைப்பு

கெய்ரோ, மே 15

**ஐக்கிய அரபுக் குடியரசில் புதிய மந்திரிசபை ஒன்றை ஜனாதிபதி அன்வார் சதாத் அமைத்துள்ளார். எகிப்தில் ஆட்சிமாறறத்தைச் செய்ய சதி செய்ததாக ஆறு அமைச்சர்களும் உயர்தர அரசியல் தலைவர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.**

ஐக்கிய அரபுக் குடியரசில் தம்மை ஆட்சியிலிருந்து அகற்றுவதற்கு ஆறு அமைச்சர்களும் மற்றும் சில உயர்தர அரசியல் தலைவர்களும் மேற்கொண்ட சதி முயற்சியை தாம் முறியடித்துள்ளதாக ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி அன்வார் சதாத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபுக் குடியரசில் அண்மையில் ஏற்பட்ட அரசியல் பிரச்சினை பற்றி நாட்டு மக்களுக்கு கெய்ரோ வானொலி மூலம் திரு சதாத் விளக்கம் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் ஐக்கிய அரபுக்குடியரசு மந்திரிசபையிலிருந்து ராஜினாமாச் செய்த ஆறு அமைச்சர்களும் எகிப்தின் ஒரே அரசியல் கட்சியான அரபு சோஷலிஸ யூனியனின் மூன்று உயர்தலைவர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ஐக்கிய அரபுக்குடியரசு ஆட்சியை மாற்றச்சதி செய்தார்கள். இவர்களோடு முன்னாள் யுத்த அமைச்சர் திரு பௌசி வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். சென்றமாதம் ஐக்கிய அரபுக் குடியரசு, சிரியா லிபியா ஆகிய மூன்று அரபுப் பிரதேசங்களும் ஓர் கூட்டரசு அமைத்துக்கொள்வதென்ற முடிவை அடுத்து அரசியல் கருத்துவேற்றுமை ஆரம்பித்தது. இந்த எதிர்ப்புக்கு காரணமாக உப-ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்கப்பட்ட அலி சாப்ரி தலைமை தாங்கினார், இவர்களது தொலைபேசித்தொடர்புகளை ஒட்டுக்கேட்டதன் மூலம் இவர்களது சதிமுயற்சியை அறிந்துகொண்டேன். எனது பேச்சுக்களையும் மற்றும் விஷயங்களையும் அறிந்துகொள்வதற்காக எனது அலுவலகத்திலும் வீட்டிலும் ரகசிய ரேப் றிக்காடர்களை வைத்திருந்தனர்

முன்னாள் உள்துறை மந்திரியாக இருந்த திரு சோமாவின் உதவி ஆட்கள் சிலநாட்களுக்கு முன் கெய்ரோ வானொலியில் பேசிய எனது பேச்சைக் கெடுப்பதற்காக வானொலி நிலையத்தைச் சூழ்ந்திருப்பதை என்னால் கவனிக்க முடிந்தது அரபுக் கூட்டமைப்புப் பற்றி எகிப்திய மக்கள் சுதந்தரமாக வாக்களித்து தமது விருப்பத்தைத் தெரிவிக்க விரும்பினால் அவ்வாறுசெய்ய நான் தயாராகஇருக்கிறேன் என்றார்.

ஜனாதிபதி திரு அன்வர் சதாத் இப்பொழுது புதிய மந்திரிசபை ஒன்றை அமைத்துள்ளார். புதிய மந்திரிசபையில் ஒரே உபஜனாதிபதியாக ஹுசேயின் அல்சாபி இருப்பார். டாக்டர் மகமூத் பௌசி பிரதமராகவும் படைகளின் தளபதியாகவும் பாதுகாப்புஅமைச்சராகவும் லெப்டினன் ஜெனரல் மகமூத் செனத்திக் நியமிக்கப்பட்டுள்ளார் முன்னைய மந்திரிசபையில் வெளியுறவு அமைச்சராக இருந்த திரு றியாத் புதிய அமைச்சரவையிலும் அதே பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார்,

எகிப்திய தலைவர்களில் ஒருவரான திரு. லபுபூ அக்கீரும் அவரது உதவியாளர்கள் 11 பேரினதும் ஆட்சிமன்ற உரிமையை பறிப்பதென ஐக்கியஅரபு குடியரசுமந்திரிசபை முடிவு செய்துள்ளது.

### சூடான் அதிபர் ஆதரவு

திரு. அன்வர் சதாத் ஐக்கிய அரபுக்குடியரசில் எடுத்துக்கொண்ட முடிவுக்கு சூடான் ஜனாதிபதி நுமேரி ஆதரவுதெரிவித்துள்ளார்.

சதாத்தின் அரசியல் முடிவுக்கு ஆதரவு தெரிவித்து நாடெங்கிலுமிருந்து பாராட்டுக்கள் வந்தவண்ணமிருப்பதாக கெய்ரோ வானொலி தெரிவித்தது.

### சதாத் வழியில் சிரியா அதிபர்

சதாத்தின் நடவடிக்கையைப் போல சிரியா அதிபர் திரு: சாத்தும் தனது அரசாங்கத்தில் இருக்கும் இடதுசாரித் தலைவர்களை நீக்கப்போவதாக அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி சதாத்தின் சமாதானத் திட்டங்களை குறைகூறிவந்த சுராக் வானொலியும் பத்திரிகைகளும் 200க்கு மேற்பட்ட ராணுவ அதிகாரிகளை திரு. சதாத் கட்டாய ஓய்வில் அனுப்பியுள்ளதாக தெரிவித்துள்ளன.

### தயான் கருத்து

சதாத் எடுத்த அரசியல் நடவடிக்கை எந்த அளவுக்கு இஸ்ரேலுக்கும் எகிப்துக்குமான சூயஸ்கால்வாய் திறப்பது பற்றிய பிரச்னை மற்றுமுள்ள பிரச்னைகளைத் தீர்க்க வழிசெய்யும் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும் எனத் இஸ்ரேல் அமைச்சர் தயான் தெரிவித்துள்ளார்.

## பேச்சுக்களில் முன்னேற்றம்

பிரஸல்ஸ், மே. 15

ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் சேர்ந்து கொள்வது சம்பந்தமாக பிரிட்டனுக்கும் மற்றும் ஆறு ஐரோப்பிய நாடுகளின் அமைச்சர்களுக்கும் மத்தியில் பிரஸல்ஸில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் திருப்திகரமான முறையில் முன்னேற்றம் கண்டு வருகின்றன இத் தகவலை பிரிட்டனின் பிரதம மத்தியஸ்தரான திரு. ஜியோபிரே ரிப்பன் இன்று இங்கு வெளியிட்டார்.

இந்தப் பேச்சு வார்த்தைகளின் போது உடுப்படியான முன்னேற்றத்தை காண்பதற்கு நாம் முனைந்துள்ளோம் என்றார் அவர்.

பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் பேசுகையில், 'நாம் திருப்திகரமான முறையில் பேச்சுக்களை நடத்தியுள்ளோம். பல விவகாரங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளோம்' என்றார். சாம்ராஜ்ய நாடுகள் சம்பந்தப்பட்ட மட்டில் பொதுச் சந்தை நாடுகளுடன் ஓரளவு கட்டுறவு அல்லது ஒருவித உடன்படிக்கை செய்து கொள்வதற்கு ஐரோப்பிய நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

நாம் விசேஷ ஒப்பந்தங்கள் செய்யவேண்டுமெனக் கோரிய பொருட்களில் 12 சம்பந்தமாக இப் பேச்சுக்களின் போது உடன்பாட்டிற்கு வந்துள்ளோம் என்று ரிப்பன் கூறினார்.

### பண்டங்களை நிறுத்தி வைத்துள்ளது

லண்டன், மே 15

பிரிட்டிஷ் ஏற்றுமதியாளர் பாகிஸ்தானிலுள்ள விற்பனையாளர்களுக்கு கடனுக்குப் பண்டங்களை ஏற்றுமதிசெய்வதைநிறுத்திவைத்துள்ளது. கடன் உத்தரவாத அலுவலகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாகவே மேற்படி ஏற்றுமதிப்பொருட்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

### 15 வீதம் கூடுதல் நெல் விளைச்சல்

சென்னை, மே 15

தமிழ் நாட்டில் இந்த வருடம் 53 லக்ஷத்து 3 ஆயிரம் தொன் நெல் விளைந்துள்ளது. இது முன்னைய ஆண்டுகளை விட 15 வீதம் கூடுதலாகக் காணப்படுகிறது என்றும் இதனால் இந்த வருடம் ராஜ்யத்தில் உணவுக் கட்டுப்பாடு இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ராஜினாமா

பொன், மே 15

மேற்கு ஜெர்மன் நிதி அமைச்சர் திரு. அலெக்ஸ் மொலர் தமது பதவியை ராஜினாமாச் செய்தார்.

உருகுவேயில்

### விவசாய அமைச்சர் கடத்தப்பட்டார்

லண்டன், மே 15

உருகுவே முன்னாள் விவசாய அமைச்சரைத் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர். அவரைக்கண்டு பிடிப்பதற்கான முயற்சியை அரசாங்கம் எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கைதிகள் பரிமாற்றத்திற்கு ஹனோய் இணக்கம்

சைகோன், மே 15

தென்வியட்னாம் யுத்தக் கைதிகள் முகாமில் இருக்கும் 570 காயப்பட்ட வடவியட்னாம் துருப்புக்களை ஏற்றுக்கொள்ள வடவியட்னாம் அரசு முடிவுசெய்துள்ளது. இத்தகவலை ஹனோய் வானொலி தெரிவித்தது.

யுத்தக் கைதிகளை ஏற்றுக் கொள்வதென்ற ஹனோயின் முடிவை அமெரிக்க இராஜாங்க இலாகாவும் தென்வியட்னாம் அரசும் வரவேற்றுள்ளன.

வியட்னாம் சமாதானம் சம்பந்தமாக பாரிசில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் யுத்தக் கைதிகள் பரிமாற்றம் பற்றிய விஷயத்தாலேயே தடைப்பட்டிருப்பதாகவும் ஹனோயின் இந்த முடிவு பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட தேக்கம் ஓரளவு குறைய வழிவகுக்குமென தென்கிழக்காசியா அரசியல் நிருபர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்த யுத்தக் கைதிகள் சிவில் கப்பல்கள் மூலமே பரிமாற்றப்படவேண்டுமென்றும். பரிமாறும்இடத்தில் 24 மணிநேரம் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டுமென்றும் ஹனோய் அரசு தெரிவித்துள்ளது.

## ஆங்கிலமே ஆட்சிமொழியாக இருக்கவேண்டுமாம்

### தமிழக முன்னாள் கவர்னர் கூறுகிறார்

சென்னை, மே 15

ஹிந்திமொழி பேசாத தென்னகமக்கள் மத்தியில் ஹிந்தி ஆட்சிமொழி பற்றிய அச்சம் தீரும்வரை ஆங்கிலமே இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று பதவியிலிருந்து ஓய்வுபெற்று செல்லும் தமிழ்நாடு கவர்னர் சர்தார் உஜ்ஜிஸ்சிங் தெரிவித்தார்.

சென்னையில் அவருக்கு பிரியாவிடை ஒன்று அளிக்கப்பட்டது. அதில் அவர் தொடர்ந்து பேசுகையில், தென்னக மக்கள் ஹிந்திமொழியை வெறுக்கவில்லை. ஆனால் ஹிந்தி ஆட்சி மொழி விஷயம்பற்றி சில அச்சங்கள் இருக்கின்றன. அது பற்றி வீணான சர்ச்சைகள் செய்வதைவிட்டு அவர்களது நியாயமான அச்சங்களைப் போக்க முயல வேண்டும். தமிழ்நாட்டு மக்கள் என் மீது மிகுந்த அன்பு காட்டினார்கள். எனது பதவிகாலத்தில் முதலமைச்சராக இருந்த திரு பக்தவத்சலம், அறிஞர் அண்ணா ஆகியோர் எனது நிர்வாகத்திற்குப் பெருந் துணையாக இருந்தனர். அன்றைய எனது நெருங்கிய நண்பராய் இருந்தார். இப் பொழுதைய முதல்வர் கருணாநிதி என்மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார் என்றார்.

......

### ஆழ்கடலில் ஒரு பெண்

மாஸ்கோ, மே 15

பூமியின் காந்த சக்திப் பாதையை அளப்பதற்காக அண்மையில் சர்வதேச ஆராய்ச்சி ஒன்று நடைபெற்றது. அவ்வமயம் வலேரியா என்ற சோவியத் பெண் விஞ்ஞானி 'ஆர்க்கிமெடிஸ்' என்ற பிரெஞ்சு ஆழ்கடல் ஆய்வுக்கூடத்தில் கடல் நீருக்குக்கீழே 2500 மீட்டர் ஆழத்தில் தமது ஆராய்ச்சிகளை நடத்தினார்; இது ஓர் உலக சாதனையாகும். பேராசிரியர் எட்வர்டு, ஆய்வுக் கூடத்தைச் செலுத்திய கொரார்டு. ஆகியோருடன் அவர் 8 மணி நேரம் 2500 மீட்டர் ஆழத்தில் சோதனைகளை நடத்தினார்

### அமெரிக்கா ஆட்சேபனை

வாஷிங்டன், மே 15

அமெரிக்க மீன்பிடிக் கப்பல் ஒன்றை சோவியத் கடற்படையினர் தாக்கியதற்கு அமெரிக்கஅரசாங்கம் சோவியத்திடம் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவிலுள்ள சோவியத் தூதுவரிடம் இவ்வாட்சேபனைக் குறிப்பு கையளிக்கப்பட்டது. அதில்சோவியத் கடற்படையினர் அமெரிக்க மீன்பிடிக்கப்பல்களுக்கு இடையூறுசெய்வது இது முதல்தடவையல்லவென்றும் இதுபோன்று பலமுறை தாக்குதல் நடைபெற்றுள்ளதாகவும். அதற்கான நஷ்டஈடு வழங்கப்படவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

...

### சிறைச்சாலையில் 11 பேர் பலி

கல்கத்தா, மே 15

மேற்கு வங்காளத் தலைநகரான கல்கத்தாவிலுள்ள உம்டம் மத்திய சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்ட தீவிரவாதிகளின் வன்முறைகளை அடுத்து பொலிசார் சுட்டதில் 11 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என செய்தி ஒன்று கூறுகிறது. இச்சம்பவத்தை ஊர்ஜிதப்படுத்திய துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. கோஷ் இறந்தவர் தொகை பற்றிய விபரத்தை தெரிவிக்கவில்லை.

இதுபற்றிச் சொல்லப்படுவதாவது!

சிறை வைக்கப்பட்ட தீவிரவாதிகள் உட்பட 100க்கு மேற்பட்ட கைதிகள் தப்பி ஓட முயன்றபொழுது பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகவும், அதில் 11 பேர் கொல்லப்பட்டதாகவும், தப்பிஓடியவர்களில் 14 பேர் திரும்பக் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வாலிப முன்னணி நடவடிக்கை

உடுப்பிட்டி, வெள்ளி

நவிண்டில் தெற்கு வாலிப முன்னணியினர் நவிண்டில் பகுதியை ஒரு முன்மாதிரியான கிராமமாக்கும் முயற்சியிலீடுபட்டுள்ளனர். இதற்கு முன்னோடியாக வாலிபர்கள் இங்குள்ள கிணறுகளையும் வீதிகளையும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்து வருவதோடு சுகாதாரத்தைப் பேணுவது சம்பந்தமான ஆலோசனைகளையும் கிராம மக்களுக்குக் கூறி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழையின் சிரிப்பிலே இறைவன்!



— மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி - தமிழ் நாடு முதல் அமைச்சர் —

**"அன்பையும் மனிதாபிமானத்தையும் அள்ளி வழங்குகிறவன் ஆண்டவனை தன்னுள் அடக்கிவைத்துக்கொள்கிறான். அவனே ஆண்டவன் ஆகிவிடுகிறான்.' இவை இறைவன் எங்கேயிருக்கிறான் என்பதற்கு இப்படி விளக்கம் கூறுகிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் திரு. மு. கருணாநிதி. சீக்கிய மதத்தலைவர் குருநானக் அவர்களின் ஐநூறாம் ஆண்டு பிறந்ததின விழா பஞ்சாபில் கொண்டாடப்பட்டபோது கலைஞர் கருணாநிதி அவ்விழாவில் கலந்துகொண்டு நிகழ்த்திய சிறப்புச் சொற்பொழிவு இங்கு தரப்படுகிறது:**

பெருமைக்குரிய குருநானக்கின் ஐநூறாம் ஆண்டு விழாவில் கலந்துகொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ்நாட்டு மக்களுக்கு திருக்குறள் என்ற அறநூலைத் தந்தவர் திருவள்ளுவர். அவருடைய இரண்டாயிரம் ஆண்டு விழாக்கொண்டாடப்படும் இந்த ஆண்டில் குருநானக்கின் ஐநூறாம் ஆண்டுவிழா நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. பஞ்சாபுக்கும், தமிழ்நாட்டுக்கும் எத்தனையோ ஒற்றுமைகள் இருக்கின்றன.

எனக்கும், உங்கள் முதல் அமைச்சர் குர்நாம்சிங்கிற்கும், ஏற்பட்டுள்ள ஒற்றுமையை மட்டும் நான் குறிப்பிடவில்லை. ஜாதி, மத, மூடநம்பிக்கைகளை ஒழிக்கவேண்டும் என்ற கருத்தை தமிழ்நாட்டில் வள்ளுவர் வழி நின்ற அறிஞர் பெருமக்கள் கூறிவருகிறார்கள்.

பஞ்சாபிலும் குருநானக் வழி நின்று அதே கருத்தை நீங்கள் முழங்கி வருகிறீர்கள்.

இந்திய விடுதலைப் போராட்டத்தின் முதல் கட்டமாகத் தமிழ் நாட்டில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டான். பஞ்சாப் வீரர் பகவத்சிங்கும் தூக்குக்கயிற்றை முத்தமிட்டான்.

எங்கள் தமிழ்நாட்டில் வெள்ளையர்களின் கொலை வெறிக்கு ஆளான, ஊமைத்துரை, பெரிய மருது-சின்ன மருது ஆகியோரையும், உங்கள் பஞ்சாப்பைச் சேர்ந்த சுகதேவ், ராஜகுரு ஆகியோரையும் ஒப்பிட்டுப் பார்க்கிறேன். உடலெல்லாம் புல்லரிக்கின்றது அந்த வீரர்கள் இரத்தம் சிந்திய மண்ணை வணங்குகின்றேன்.

எங்கள் மாநிலத்துக்குத் தமிழ்நாடு என்ற பெயர் வைக்கவேண்டுமென்று உண்ணாவிரதமிருந்தார் சங்கரலிங்கம். உண்ணாவிரதத்திலேயே இறந்து போனார். இப்போது அல்ல, பத்துவருடங்களுக்கு முன்பு!

இங்கேயும் உண்ணாவிரதம் இருந்த 'பெருமான்' என்ற பெரியவர் உயிர் துறந்தார்.

பிரச்னையில் நான் நுழைய விரும்பவில்லை, அந்த வீரர் பிறந்த இந்த மண்ணை நான் மண்டியிட்டுத் தொழுகின்றேன்.

ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு பிறந்த குருநானக், தன்னுடைய கொள்கைகளை நிறைவேற்றுவதில் எவ்வளவோ சிரமங்களைச் சந்தித்தார். சிறைச்சாலையில் கூட அடைக்கப்பட்டார். அதுவும்கூட அவருக்கு வசதியாகப்போய்விட்டது. அங்குள்ள கைதிகளுக்குத் தன் கொள்கைகளைப் பரப்பினார். இலட்சிய வாதிகளுக்கு சிறைச்சாலையைவிட விருப்பமான இடம் வேறெதுவும் இல்லை. சில நேரங்களில் முதல் மந்திரிப் பதவியைவிட, நான் முன்பு அடிக்கடி போய்வந்த சிறைச்சாலையே எனக்கு மேலாகத் தெரிகின்றது.

குருநானக், சிறையையும் சிந்தனைச் சோலையாகமாற்றினார். அப்படிப்பட்ட ஆற்றலை அவர் இளம் வயதிலேயே பெற்றிருந்தார். சூரியன் உதிக்கும்போது இருளை விரட்டிக்கொண்டுதான் உதிக்கின்றது அதேபோல், குருநானக் சிறுவயதில் வளரும்போதே மூடநம்பிக்கையின் இருளை விரட்டிக் கொண்டு வளர்ந்தார்.

இளைஞர் நானக்கிற்கு பூணூல் போடுவதற்கு அவருடைய வீட்டார் எல்லா ஏற்பாடுகளும் செய்தனர். அதை அவர் மறுத்தார்,

"அன்பையும், மனிதாபிமானத்தையும், அறிவையும் நூலாகத் திரித்து அணிந்து கொள்ளுங்கள். அந்தப் பூணூல்தான்புனிதமானது. இது தேவையில்லை" —

இப்படி அவர் விளக்கம் சொன்னார்.

ஒருநாள் அவர் களைப்பு மிகுதியால் கடவுள் சந்நிதானத்திற்கு நேராக காலை நீட்டிக்கொண்டு தூங்கிவிட்டார். அதுகண்டு மதவாதிகள் திடுக்குற்றனர். அவரை எழுப்பிக் கண்டித்தனர். "கடவுள் எங்கே இல்லையோ அந்தப் பக்கமாக என் காலைத் திருப்பிவிடுங்கள்" என்று அவர் தெரிவித்தார் கண்டித்தவர்கள் மன்னிப்புக் கேட்டுக்கொண்டனர்.

இந்து, முஸ்லிம் ஆகிய இருமதங்களையும் இணைத்து அவர் ஒரு புதுமதம் உருவாக்கினார்.

எங்கள் தமிழ் நாட்டில் சேலம் என்ற ஒரு மாவட்டம் இருக்கின்றது. அங்கே இரண்டு மாஞ்செடிகளை ஒன்றாக இணைத்து வளர்ப்பார்கள். அதில் கிடைக்கும் பழத்திற்கு "ஒட்டுமாம்பழம்" என்றுபெயர்மிகுந்த சுவையாகவிருக்கும் அந்தப் பழம் அந்தப்பழம் போன்றது தான் சீக்கிய மதமும்.

பெரியவர்களுக்கு விழா எடுப்பது மட்டும் போதாது குருநானக் பெயரில் தமிழ் நாட்டில்ஒரு கல்லூரி அமைக்கிற முயற்சிக்குத் தமிழக அரசு ஆதரவளிக்க முன்வந்துள்ளது.

தமிழ்நாட்டில் நடைபெறும் குருநானக் விழாக்களில், நாங்கள் மகிழ்வுடன் கலந்து கொண்டிடுகிறோம் விழா, மகிழ்ச்சி கொண்டாட்டம் இவைகளோடு நின்றுவிடாமல் பெரியவர்கள் வகுத்த நெறியில்நின்று நாமும் வாழவேண்டும் சமுதாயத்தையும் வாழவைக்க வேண்டும்.

நாட்டில் எத்தனையோ மதவாதிகள் தோன்றினார்கள். ஆனால் இன்னும்பேதங்கள் மறையவில்லை.

எத்தனையோ சீர்திருத்தவாதிகள் தோன்றினார்கள். இன்னும் சாதிச்சிக்கல் தீரவில்லை.

இதற்கெல்லாம் காரணம் என்ன? அதை நாம் ஆராய வேண்டும். நல்ல மருந்து இருந்தும் நோய்தீரவில்லையென்றால் காரணமென்ன? டாக்டர் கொடுத்த மருந்தை நோயாளி சாப்பிடவில்லை என்றால் நோய்தீராது.

பெரியவர்கள் வகுத்த கொள்கைகள் புத்தகங்களில் இருந்தால் மட்டும் போதாது. அவைகளைப் படிக்கவேண்டும். படித்தபடி நடக்கவேண்டும் மற்றவர்களுக்குப் பரப்பவேண்டும்.

சூரியன் ஒளியை தருகின்றான். அதில் விதைப்பவர் விதைத்துக் கொள்ளவேண்டும். வானம் மழையைத்தருகிறது. அதை வயலுக்குப் பயன்படுத்துபவர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஒளியோ, மழையோ மனிதனின் கையைப் பிடித்து 'ஏ...சோம்பேறி...என்னைப் பயன்படுத்திக்கொள்' என்று கெஞ்சுவதில்லை அதைப் போல பெரியவர்கள் ஒளி வளர்கினார்கள், கருத்து மழை பொழிந்தார்கள். அதனைப் பயன் பயன்படுத்திக் கொள்ள நாம் தவறிவிட்டோம். அது நம் குற்றமே தவிர அவர்கள் குற்றமல்ல,

அன்பையும் மனிதாபிமானத்தையும் கொண்டு திகழ்கிறவன் ஆண்டவனை தனக்குள் அடக்கிவைத்துக்கொள்கிறான். அவனே ஆண்டவன் ஆகிவிடுகிறான்.

இப்படிச் சுலபமாக ஆண்டவனுவதற்குவழி இருக்கும் போது அதைப்புறக்கணித்து விட்டு மனிதர்கள் ஆண்டவனை எங்கோதேடி அலைகிறார்கள்.

ஏழையின் சிரிப்பில்-
குழந்தையின் மழலையில்-
பாட்டாளியின் வியர்வையில்- பெண்ணின் கற்பில்- ஆண்டவனின் பண்பில் விவேகியின் வழியில்-
விஞ்ஞானியின் அறிவில்-
ஆண்டவன் இருக்கிறான்.

அதை விட்டு விட்டுக்குருட்டு மனிதன் இருட்டு அறையில் கறுப்புப் பூனையைத் தேடுவது போல் சிலர் கடவுளை தேடி அலைகிறார்கள்.

அவர்களுக்கெல்லாம் கடவுளின் உண்மை விளக்கத்தை அளித்தவர்தான் குருநானக்.

சமூகத் தொண்டு காலத்திற்குக் காலம் மாறுகிறது. காட்டுமிராண்டிகளாக இருந்தவர்களுக்கு நாகரிகம் போதிப்பதற்குச் சிலர் தேவைப்பட்டது ஒரு காலம்.

நாகரிகம் பெற்றவர்கள் தங்களுக்குள் ஆயிரம்பேதங்களை வளர்த்துக்கொண்டனர். அதைச் சீர்திருத்த சிலர் தேவைப்பட்டது ஒரு காலம். சீர்திருத்தவாதிகள் சிலர் பலராக வளர்ந்தனர். அந்தப் பலருக்குள் மோதுதல் ஏற்பட்டு. அதைத் தீர்த்துவைக்க சமரசவாதிகள் தேவைப்பட்டது ஒரு காலம்.

பச்சை மாமிசம் சாப்பிட்ட மனிதன், சமைத்துச் சாப்பிட பழக்கப்படுத்தப்பட்டான். சமைத்துச் சாப்பிடும்போது அவனைப் பசிப்பிணியிலிருந்து மீட்பது

(5-ம் பக்கம் பார்க்க)


# காய்ச்சல், சளிசுரத்தைச் சகித்துக் கொண்டு வீணாகச் சங்கடப்பட வேண்டாம்




## டிஸ்பிரின் உட்கொண்டு அதிதுரித நிவாரணம் பெறுங்கள்

உங்களுக்குக் காய்ச்சல், சளிசுரம் வந்தால்
★ ஒய்வெடுங்கள்
★ உடம்பைச் சூடாக வைத்திருங்கள்
★ நீர் ஆகாரம் சாப்பிடுங்கள்
★ 4 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை 2 டிஸ்பிரின் மாத்திரை உட்கொள்ளுங்கள்

காய்ச்சல், சளிசுரம் வரும் போது காய்ச்சலைக் குறைக்கும் மருந்துகளைக் கிரமமாகப் பாவிக்க வேண்டியிருக்கும். கிரமமாகப் பாவித்தால், சில மருந்துகள் பெரும் பாதக விளைவுகளைக் கொடுக்கக் கூடும். டிஸ்பிரின் முற்றாகக் கரைவதாகையால், கரையாத மற்ற மருந்துகள் போல, உடம்புக்குப் பாதகமான துகள்களை வயிற்றில் விட்டு வைப்பதில்லை. சில புதிய மருந்துகளிற் போல, பாதக விளைவுகளை ஏற்படுத்தும் சேர் பொருள்களும் டிஸ்பிரினிற் கிடையாது. எனவே எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.

**டிஸ்பிரின் அதிதுரித நிவாரணம் தரும்**

டிஸ்பிரின் மிக விரைவாகவும் முற்றாகவும் கரைந்து இரத்தோட்டத்திற் சீக்கிரம் செறிகிறது. இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிவதால் மிக வேகமாக உடம்பிற் செயலாற்றி உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது. அதனால்தான் உலகமெங்குமுள்ள வைத்திய நிபுணர்கள் அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிறார்கள்.

தலைவலி, நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமல், மாதவிடாய் வலி, வாத நோவுகளிலிருந்து அதிதுரிதமான அதிபாதுகாப்பான நிவாரணம் பெற டிஸ்பிரின் பாவியுங்கள்.

2 மாத்திரைகளை நீரிற் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.

குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

உதை 47

றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தீண்டாமைப் பிரச்னை சைவனுக்கு இல்லை"

அரியாலை, சனி

"சாதி வேற்றுமை எப்பொழுது சைவ சமூகத்தினின்று மறைகிறதோ அப்பொழுதுதான் சைவன் ஒருவன் தன் சமயத்தின் முதற்படியில் கால் வைக்கிறான். தீண்டாமை எனும் நோய் சமூகத்தின் சாபக்கேடாகும்" என சுவாமி சிவயோகானந்தா நல்லூர் வைகுந்த கைலாச ஆசிரமத்தில் பேசுகையில் கூறினார்.

இலங்கையரான சுவாமி சிவயோகானந்தா இந்தியாவில் தங்கியிருந்த கவியோகி சுத்தானந்த பாரதியாரிடம் சந்நியாசம் பெற்றவராவர். கவியோகியின் முதலாவது சீடரும் இவர்தானென்பது குறிப்பிடத்தக்கது.

சுவாமி தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:

சைவ அனுட்டானங்களைச் சைவ உலகிற்கு முதன்முதலாக மிகத் தெட்டத்தெளிவாக நூலுருவில் தந்தவர் நாவலரே. இராமலிங்கசுவாமிகளின் அருட்பாக்களை உலகறியும்வண்ணம் இவர் செய்தார். சைவமென்பது ஒரு சமரச சமயமென்பதை நாவலர் உணர்த்தினார்.

சுவாமிகள் இன்று காலை திருமலைக்குப் பயணமானார்.

## ஏழையின் சிரிப்பிலே...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றொரு வேலையாகிவிட்டது.

குழந்தைகளைத் தெய்வம் போல போற்றுவதும் கொண்டாடுவதும் ஒரு பக்கம்.

அதிகக் குழந்தைகளை பெருதேயென கட்டுப்பாடு பிரசாரம் செய்வது மற்றொரு பக்கம்.

நாட்டைக் காக்க வீறு கொண்டெழுங்கள் என்று போர்முரசு கொட்டுவது ஒருபக்கம்!

உலகில் அமைதிப்புறா பறக்கவிடுவோம் என்று சபதம்செய்வது மற்றொரு பக்கம்!

இத்தகைய மாறுபட்ட சூழ்நிலைகளுக்கிடையேதான் மக்கட் பணியாற்ற மனிதகுல மாணிக்கங்கள் பிறக்கிருர்கள்.

அந்தப் புத்தொளிதான் 1469-ம் ஆண்டு மிகுந்த எழிலுடன் கிளம்பியது.

"எல்லா மதங்களும்
ஒன்றே!
எல்லா மனிதர்களும்
ஒன்றே!
உண்மை எல்லாவற்றிற்கும் மேலானது
ஆனல் அதற்கும் மேலானது ஒன்று உண்டு
அது தான் உண்மையின்
வழிவாழ்வது"

இதுதான் குருநானக் போதித்தார்.

"ஒரே கடவுள்
சமயச்சடங்குகள்
வீணானவை
சாதிசமய வேறுபாடு
கூடாது"

இந்தக் கொள்கைகளை அவர் முழங்கினார்.

ஐந்நூறு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. மலைகள் இருந்த இடம் பள்ளத்தாக்குகளாக மாறிவிட்டது. ஆறுகள் திசை மாறிவிட்டன. கடல் அலைகள் சில நகரங்களை அழித்துவிட்டன காடுகள் மணல் வெளியாகிவிட்டன. மணல் வெளிகள் நந்தவனங்களாகிவிட்டன. சந்திரனைத் தன்னிடம் அழைத்த மனிதன் அது வராத காரணத்தால் அதனிடம் சென்றுவிட்டான். ஐந்நூறு ஆண்டுகளில் இயற்கையில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டாலும் குருநானக் போன்ற பெரியவர்களின் கீர்த்தியிலோ பெயரிலோ எந்த மாறுதலும் இல்லை. அப்படியே நிலைத்துவிட்டார்கள்.

குருநானக்கின் பெயர் சொல்லிப் பறவைகள் பாடுகின்றன.

அந்தப் பாட்டைக் கேட்டு மேகங்கள் ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றன

நானக்கின் கீதம் காற்றிலே மிதக்கின்றது

அந்தக் காற்று தமிழ் நாட்டைத் தழுவுகிறது

அந்தத் தழுவலிலே நான் என்னையே மறக்கிறேன்

பஞ்சாப் மக்களே! நான் உங்களோடு ஒன்றிவிடுகிறேன்

உங்கள் எதிரே நிற்கிறேன்

என்னை உங்கள் முன் நிற்க வைத்த பஞ்சாப் முதல்வருக்கு என் நன்றி

வாழ்க குருநானக் புகழ்! அனைவர்க்கும் வணக்கம்

பிள்ளைகளுக்கு

## 'மதக் கல்வியை அளியுங்கள்' —தேரோ

களனி, சனி

'நாட்டைப் பீடித்துள்ள இன்றைய துரதிஷ்டமான நிலை பெற்றோர்கள் பெரியோர்கள் ஆசிரியர்கள் ஆகியோரை விழிப்படையச் செய்திருக்க வேண்டும்'.

விகாரையில் உள்ள விபீஷண மகாதேவாலயத்தில் நடைபெற்ற விசேஷ பூஜையின்போது மேற்படி விகாரைப் பொறுப்பாளரான வண தலவெல விஜித தம்மரகித்த நாயக்கதேரோ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது! அநேகமான பயங்கரவாதிகள் பௌத்தர்களாக விருக்கிருர்கள் என்பதை நினைக்கும்போது கவலையாகவிருக்கிறது. இந்த நேரத்தில் தான் பௌத்த பிக்குகள் நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டப் பாடுபட வேண்டும். ஆசிரியர்கள் பெற்றோர்கள் பெரியோர்கள் ஆகியோர் நாட்டின் தற்போதைய நிலையை நன்குணர்ந்து பிள்ளைகளுக்கு பூரண சமயக் கல்வியைப் புகட்டவேண்டும்.

அகில இலங்கைப் பௌத்த காங்கிரஸ் தலைவர் டாக்டர் ஜி.பி. மலலசேகரவும் இவ் வைபவத்தில் கலந்துகொண்டார்.

## புதிய தேர்

வல்வெட்டித்துறை, சனி

வடபகுதியில் பிரசித்தி பெற்ற சைவ ஆலயங்களுள் ஒன்றான புங்குடுதீவு கண்ணகி அம்பாள் கோவிலுக்கு புதியதான அழகிய தேர் ஒன்றை அமைப்பதற்கு ஆலயபரிபாலன சபையார் தீர்மானித்துள்ளனர்.

தேர்த்திருப்பணிக்கான நிதி சேர்த்தலும் நடைபெற்றுவருகிறது. சுமார் மூன்றரை லட்சம் ரூபா செலவில் தேர் அமைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் ஆலயத்தில் உற்சவ காலங்களில் அன்னதானம் செய்வதற்கான மண்டபம் ஒன்றையும் பெரிதாக அமைப்பதற்கு ஆலய பரிபாலனசபை முடிவுசெய்துள்ளது.

தாவடி, சனி

கோண்டாவில் மேற்கு உப்புமடம் சந்திக்கண்மையிலிருக்கும் வேதபாராயண சனசமூக நிலைய நூல் நிலையம் திறக்கப்படாமலிருப்பதால் வாசகர்கள் கவலையடைந்திருப்பதாகத் தெரியவருகிறது.

கரபந்தாட்டம்

## றெக்கிளமேசன் சாம்பியன்

யாழ்ப்பாணம், ஞாயிறு

விளையாட்டமைச்சின் ஆதரவுடன் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களிடையே காரியாதிகாரிப் பிரிவினுல் நடாத்தப்பட்ட 'கரபந்தாட்ட தொகவும்' போட்டியில் 'றெக்கிளமேசன்' சனசமூகநிலையம் சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டது.

இந்தப் போட்டியின் இறுதியாட்டம், குருநகர் சனசமூக நிலையத்துக்கு, றெக்கிளமேசன் சனசமூக நிலையத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், றெக்கிளமேசன் சனசமூக நிலையம் 14—8, 12—14, 15—14 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

றெக்கிளமேசன் கோஷ்டியின் வீரர்களான ஜேம்ஸ், தாசியஸ், குருநகர் கோஷ்டியின் வீரர் சிறில் ஆகியோரின் ஆட்டம் சிறப்பாக இருந்தது.

இப்போட்டிக்கு திரு. ஈ. கே. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

0 0 (தே நி)

## ஸ்பேஸ் வெற்றி

பருத்தித்துறை, சனி

பம்பலப்பிட்டி தமிழ் யூனைற்றெட் விளையாட்டுக் கழகத்திற்கும், ஸ்பேஸ் கழகத்திற்கும் கரவெட்டியில் நடந்த சிநேகபூர்வமான கரபந்தாட்டப் போட்டியில் கரவெட்டி ஸ்பேஸ் 2: 1 ஆட்டங்களால் வெற்றியீட்டியது. இரத்தினசிங்கம் சுப்பிரமணியம் ஆகியோரின் ஆட்டம் பாராட்டப்பட்டது. திரு. எஸ். தம்பையா மத்தியஸ்தம்வகித்தார்.

0 0

## விளையாட்டு மைதானங்கள்

அரியாலை, சனி

கரபந்தாட்டத்தைக் குவலக்க மளிக்கும் முகமாக நாடெங்கிலும் கரபந்தாட்ட மைதானங்களை அமைக்க விளையாட்டு அமைச்சு முடிவுசெய்துள்ளது இம்மைதானங்கள் ஒவ்வொரு விளையாட்டு போதனுசிரியர் பிரிவிலும் ஐந்து கரபந்தாட்ட மைதானங்களை திறவ விளையாட்டு அமைச்சு முடிவுசெய்துள்ளதாக தெரிகிறது.

0 0

## வெற்றி தோல்வி இல்லை

உடுப்பிட்டி, சனி

கரணவாய் தெற்கு யுரேனஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் கரணவாய் தெற்கு வீனஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் மோதல் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

திருவாளர்கள் கே. சண்முகசுந்தரம் பீ. இராமநாதன் ஆகியோர் நடுவர்களாகப் பணியாற்றினர்.

0 0 0

## அல்வாய் யூனைற்றெட் வெற்றி

பருத்தித்துறை, சனி

இக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் சச்சிதானந்தம் வெற்றிக் கேடயத்திற்கான இறுதிப் போட்டியில் அல்வாய் யூனைற்றெட் கரபந்தாட்டக் கோஷ்டி வதிரி பொமேஸ் கோஷ்டியை 2-0 ஆட்டங்களால் வெற்றியீட்டியது. திரு. எஸ். கதிர்காமத்தம்பி மத்தியஸ்தம் வகித்தார். வடமராட்சி வடக்கு காரியாதிகாரி ... பரிசுகளை வழங்கினார்.

# பல 'தலைவர்கள்' கைது!

## பயங்கரவாதிகளின் தொல்லை அதிகரிப்பு

கோட்டை, வெள்ளி

நாட்டில் மேலும் பல பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். பயங்கரவாதிகளின் 'தலைவர்கள்' எனச் சொல்லப்படும் இருவர் கைதுசெய்யப் பட்டதோடு இன்னுமொரு தலைவன் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மொரட்டுவப் பகுதியில் பயங்கரவாதிகளின் தலைவன் எனச் சொல்லப்படும் தேவபண்டார கைது செய்யப்பட்டார். கடந்த ஏப்ரல் 5ம் திகதி மகரகம பொலிஸ் நிலையத்தைத் தாக்கிய பயங்கர வாதிகளுக்கு இவரே தலைமை வகித்தாராம். பதுளையில் கொஸ்வத்த என்ற தலைவனும் கைது செய்யப்பட்டான்.

காலியில் பயங்கரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்குமிடையே நடந்த சண்டையில் பயங்கரவாதிகளின் அப்பகுதித் தலைவன் எனச்சொல்லப்படும் ஜயசேனு கொல்லப்பட்டான் என்று அரசாங்கம் அறிவித்தது.

நாட்டின் பல பகுதிகளிலும் மேலும் பல பயங்கரவாதிகள் சரணடைந்து வருவதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது. காலி, இங்கிராக்கொட, அம்பாந்தோட்டை, திருகோணமலை, கண்டி ஆகிய பகுதிகளில் பயங்கரவாதிகள் பலரைப் பொலிசார் கைது செய்துள்ளனர். மொனறுகலையில் 13 பேரும், மாத்தறையில் 11 பேரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

நாட்டில் பயங்கரவாதிகள் பொதுமக்களை மேலும் துன்புறுத்தி வருவதாக தகவல்கள் கிடைத்திருப்பதாக தகவல் அமைச்சு அறிவித்துள்ளது. குறிப்பாக அனுராதபுரம் குருணகலை மாவட்டங்களில் பயங்கரவாதிகள் பொதுமக்களைப் பயமுறுத்தி வருகின்றனராம். அனுராதபுரம் புத்தளம் வீதியில் உணவுப் பொருட்கள் கொண்டு சென்ற இரண்டு லொறிகளை பயங்கரவாதிகள் வழிமறித்துப் பறித்துச் சென்றுள்ளனர்.

## பிரதமருக்கு ச. ச. நிலையம் பாராட்டு

பருத்தித்துறை, சனி

"மிக நெருக்கடியான நிலையில் தேசாபிமானத்துடனும் மனிதாபிமானத்துடனும் தீய, அழிவுச்சக்திகளை எதிர்த்து நின்று ஜனநாயகத்தைப் பாதுகாத்த பெருமை தங்களுக்கே உரியது என்பதை உலக வரலாறு பொன்னெழுத்துகளில் பொறிக்கப்போவது பற்றி நாம் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறோம். இன்றைய அரசாங்கத்திற்கு எமது பரிபூரண ஆதரவு என்றும் உண்டு என்பதையும் உறுதிப்படுத்துகிறோம்'

இவ்வித வாழ்த்துச்செய்தி ஒன்றை கனுவில் சனசமூக நிலையத் தலைவர் திரு. க. இராசரத்தினம் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு அனுப்பி வைத்துள்ளார்

## அனலைதீவு வெற்றி

அனலைதீவு, சனி

அனலைதீவு கரபந்தாட்டக் கோஷ்டிக்கும் ஊர்காவற்றுறை நெருஞ்சிமுனை கரபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் அனலைதீவில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் அனலைதீவு கோஷ்டி வெற்றி பெற்றது.

## ஜூன் முதல் 5 சத டிக்கெட் இல்லை

கோட்டை, சனி

ஜூன் மாதம் முதலாம் திகதியிலிருந்து பஸ் கட்டணம் 5 சதத்தால் அதிகரிக்கப்படவிருக்கிறது

இ. போ. ச. மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளது. பல மாதங்களுக்கு முன்னர் இத்தீர்மானத்தைச் சபை அரசாங்கத்திடம் சமர்ப்பித்திருந்தது. அரசாங்கம் அதைத் தற்போது அங்கீகரித்துள்ளது.

ஜூன் முதலாம் திகதியிலிருந்து 5 சத டிக்கெட் இருக்கமாட்டாதென இ. போ. சபைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். 5 சத டிக்கெட்டை இதுவரை பெற்றுப் பிரயாணம் செய்தோர்கள் இனிமேல் 10 சத டிக்கெட்டைப் பெறவேண்டும்.

இ. போ. ச. தொடர்ந்தும் தற்போதைய பஸ் கட்டணத்தைப் பெற்றுக்கொண்டிருந்தால் சபைக்கு இவ்வருடம் 34000000 மேலும் நஷ்டம் ஏற்படுமாம்

## ஆயுர்வேத மருந்துகள்

கோட்டை, சனி

பதிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத பயிற்சியாளர் மட்டும் ஆயுர்வேத மருந்து கூட்டுத் தாபனத்திலிருந்து மருந்துகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

இத்தகவலை நேற்று ஆயுர்வேத இலாகா தெரிவித்ததுடன் மருந்துகளைப் பெற்றுக் கொள்வதற்காக தம்மிடமிருந்து அறிமுக அட்டை ஒன்றையும் பெற்றுக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுள்ளது. இந்த அறிமுக அட்டை மூலம் கூட்டுத் தாபனத்திடமிருந்து குறைந்த விலைக்குப் பெற்று கூடிய விலைக்கு விற்பனை செய்வது கட்டுப்படுத்தப் படும் என ஆயுர்வேத இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## சிரமதானமூலம் வெங்காயச் செய்கை

உடுப்பிட்டி, சனி

கரணவாய் — கரவெட்டி இளைஞர் அபிவிருத்தி இயக்கத்தைச் சேர்ந்த வாலிபர்கள் உப உணவுற்பத்தித் துறையில் ஈடுபட்டுவருகிறார்கள். மணற்பகுதியிலுள்ள வயலொன்றில் வெங்காயப் பயிர்ச் செய்கையில் சிரமதானம் மூலம் இவர்கள் ஈடுபட்டு வருகின்றனர், இதற்கான நீர்ப்பாசனம் சம்பந்தமான கோரிக்கை பற்றி எதிர்வரும் 22-ம் திகதி நடைபெறும் உடுப்பிட்டிக் கிராமசபைக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாம்.

## 7 லட்சம் புசல் நெல்

குருநாகல், சனி

குருநாகல் மாவட்டத்தில் விவசாய சேவைகள் இலாகா 7 லட்சம் புசல் நெல்லைக் கடந்த சில மாதங்களில் உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழ்கொள்வனவு செய்துள்ளது.

அரசாங்கம் நெல்கொள்வனவில் எடுத்துக்கொண்ட புதிய நடவடிக்கைகளால் பெருந்தொகையான நெல்லைக் கொள்வனவு செய்ய சாத்தியமாகவிருந்தது என மேற்படி இலாகாவைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

